செ.வெ.எண்: 405

நாள்: 3.7.2011

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 3.7.2011**

சென்னை, தீவுத்திடல் அருகில் உள்ள இந்திரா காந்தி நகரைச் சேர்ந்த கூலித் தொழிலாளி திரு. குமார் என்பவரின் 13–வயது மகன் செல்வன் தில்சன் இன்று (3.7.2011) பிற்பகல் 1.30 மணியளவில் கொடி மரச் சாலை, ராணுவ வளாகத்தில் அமைந்துள்ள மரத்தில் ஏற முயற்சித்த போது, அங்குள்ள ராணுவ காவலாளி ஒருவர் அந்தச் சிறுவனை நோக்கி துப்பாக்கியால் சுட்டதன் விளைவாக, அச்சிறுவனின் தலையில் குண்டு பாய்ந்து பலத்த காயம் ஏற்பட்டதையடுத்து, உடனடியாக சென்னை, அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்தத் துயரச் சம்பவத்தை கேள்விபட்டவுடன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. நத்தம் இரா. விசுவநாதன் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார் ஆகியோரை உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று காயமடைந்த சிறுவனுக்கு உயரிய மருத்துவ சிகிக்சை அளிக்கப் பெறுவதை உறுதி செய்யுமாறு ஆணையிட்டேன். எனினும், சிகிச்சை பலனின்றி செல்வன் தில்சன் மரணமடைந்தான் என்ற செய்தி என்னை ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்த்தியது.

மரத்தில் ஏற முயன்ற 13–வயது சிறுவன் தீவிரவாதியோ, பயங்கரவாதியோ அல்ல என்பதை பாதுகாவலர் எளிதில் தெரிந்து கொண்டிருக்க முடியும். இருப்பினும், அந்தச் சிறுவன் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியிருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்தியிருப்பதை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. எனது ஆணையின்பேரில், தமிழக அரசின் தலைமைச் செயலர், ராணுவ General Officer Commanding அவர்களுக்கு கடிதம் எழுதி, இந்தக் கொடூரச் செயலை செய்த ராணுவ வீரர் உடனடியாக தமிழக காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளார்.

அந்த ராணுவ வீரர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுவதை நான் உறுதி செய்வேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, உயிரிழப்பு ஏற்பட்டுள்ள இந்தத் துயரமான சூழ்நிலையில், பொதுமக்கள் அமைதி காத்து, சட்டம்–ஒழுங்கை நிலைநாட்ட காவல் துறையினருக்கு முழு ஒத்துழைப்பு நல்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

செல்வன் தில்சனை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் இருந்து 5 லட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்க ஆணையிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்